[21st April 1959

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, ஆட்டோமேட்டிக் தறிகள் சம்பந்தமாக நமது சர்க்காரின் கொள்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சம்பந்தமாக சர்க்காருக்கு ஆட்டோமேட்டிக் லூம்கள் வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி பிரச்னை அல்ல. சர்க்காரை பொறுத்த அளவில் ஆட்டோமேட்டிக் லூம்களை அனுமதிக்க வேண்டும் என்பது தான் கொள்கை. ஆனால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்க வேண்டும் என்பது தான் இப்போதுள்ள கொள்கை. அதாவது 15-வது அகில இந்திய முக்கூட்டு மகாநாட்டில், அதாவது தொழிலாளி, முதலாளி, சர்க்கார் இம்மூவரும் கூடியிருந்த மகாநாட்டில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி எவ்விதமான ஆள் குறைப்பும் இல்லாதபடி இதன் மூலம் கிடைக்கின்ற லாபத்தில் தொழிலாளிகளும் முதலாளிகளும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் இதன் மூலம் வேலைப்பளு அதிகமாகக்கூடாது என்றும் விதிக்கப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்திற்கு உட்பட்டு ஆட்டோமேட்டிக் லூம்களை விஸ்தரிக்கலாம் என்பது தான் சர்க்காருடைய கொள்கை.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மற்ற ராஜ்யங்களுக்கும் நம் ராஜ்யத்திற்கும் வித்தியாசம் என்னவென்றால், மற்ற ராஜ்யங்களில் எல்லாம் "ஸீஸனல் யூஸிங்" துணிகள் தான் நெசவு செய்யப்படுகிறது. நம் நாட்டில் "டெய்லி யூஸிங்" துணிகள் நெசவு செய்யப்படுகிறது. ஆகவே இவ்விதம் ஆட்டோமேட்டிக் லூம்கள் வருவதால் லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளிகள் வேலையின்றி கஷ்டப்படுவார்கள் என்பதை சர்க்கார் உணருகிறதா ? அப்படியானால் அதை கொண்டு வராமல் இருப்பதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் பவர் லூம்-க்கும் ஆட்டோமேட்டிக் லூம்-க்கும் இருக்கின்ற வித்தியாசத்தை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். "பவர் லூம்ஸ்" ஐ நம் ராஜ்யத்தில் அனுமதிக்கப்போவதில்லை என்பது சர்க்காரின் திட்டவட்டமான கொள்கை. ஆனால் ஆட்டோமேட்டிக் லூம்களை எந்த விதத்தில் அனுமதிப்பது என்பதைப் பற்றி நான் சொன்னேன். ஆட்டோமேட்டிக் லூம்கள் ஏற்படுவதினால் மில் துணிக்கும் கைத்தறி துணிக்கும் போட்டி ஏற்படுவதில்லை. பவர் லூம் ஏற்படுவதாக இருந்தால் போட்டி ஏற்படும். ஆகவே தான் பவர் லூம் ஏற்படுவதை இந்த அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

Scholarships for Harijans

* 41 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the scholarships for the year 1958–59 have not yet been sanctioned by the Director of Harijan Welfare; and

(*b*) if so, the reason for such delay?

21st April 1959]

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir. Renewal of scholarships have been sanctioned in all cases and in fresh cases scholarships have been sanctioned to deserving students up to the extent funds were available.

(*b*) There was some delay in October 1958 on account of the unexpected demise of the previous Director. In some cases delay was inevitable either because the applications were defective or because the acquittances were not received from the Principals concerned in time.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the scholarships sanctioned six months back have not yet been distributed?

THE HON. SRI P. KAKKAN : I do not know the reasons, but anyhow I will look into the matter.

SRI C. MUTHIAH : *கல்வி இலாகா, சுகாதார இலாகா போன்ற இலாகாக்களில் இருப்பதுபோல் இந்த இலாகாவிலும் டிவிஷனல் டயரக்டர் என்ற முறையில் அதிகாரிகளை நியமித்தால் ஸ்காலர்ஷிப்பை தக்க சமயத்தில் கொடுக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா? அப்படியானால், அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமிருக்கிறதா?*

THE HON. SRI P. KAKKAN : *அவ்விதம் இப்போது உத்தேசமில்லை.*

SRI K. RAMACHANDRAN : *1958–59-க்கு ஸாங்ஷன் செய்த பணம் இது வரையிலும் கொடுக்கப்படவில்லை என்பதை சர்க்கார் உணருமா? அதை உடனடியாக கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?*

THE HON. SRI P. KAKKAN : *மார்ச் 31-ம் தேதிக்குள் ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படவேண்டும் என்ற முறையில் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வருடத்தில் சாங்ஷன் செய்யப்பட்டு ஏதாவது காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் அது அடுத்த வருடத்தில் ஆரம்பத்தில் கொடுக்கப்படும்.*

SRI T. S. RAMASWAMY PILLAI : *சில அரிஜன மாணவர்கள் முதல் வகுப்பில் தேறியிருந்தும், அவர்களுக்கு சில சமயங்களில் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படாமல் இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?*

THE HON. SRI P. KAKKAN : *கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்விதம் ஒரு மாணவனுக்கு கொடுக்கப்படவில்லை என்பதைப் பற்றி தெரிவித்தார். அதை உடனடியாக கவனிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்.*

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : *இப்போது இந்த இலாகா ஷெட்யூல் வகுப்புகட்கும், பிற்பட்ட இனத்தவர்கட்கும் ஒன்றாக இருப்பதால் ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுவதாக தெரிவதால் இதை இரண்டாக தனித் தனியே இரண்டு இலாக்காவாக பிரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?*

THE HON. SRI P. KAKKAN : இரண்டாக பிரிப்பது அவசிய மில்லை, இரண்டாக பிரித்தால் செலவு இன்னும் கூடுதலாகும்.

SRI N. MARUDACHALAM : காலாகாலத்தில் கொடுக்கப்படாத இடத்தில் உடனடியாக இந்த ஸ்காலர்ஷிப் பணத்தைக் கொடுப்ப தற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது காலாகாலத்தில் கொடுப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பிரின்ஸ்பாலிடமிருந்து ரிப்போர்ட் வருவதற்கு கால தாமதம் ஆகிறது. மேலும், இதற்காக கொடுக்கப்படும் விண்ணப்பங்களும் சரியான விதத்தில் பூர்த்தி செய்து கொடுக்கப் படாமல் இருப்பதினாலும் இந்த காலதாமதம் ஏற்படுகிறது.

Minor Irrigation Schemes in North Arcot District

* 42 *Q.*—SRI. V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—*

1958-ம் ஆண்டு வடாற்காடு ஜில்லாவில் நிறைவேற்றி வைக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கான செலவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is presumed that the hon. Member refers to the schemes under the Special Minor Irrigation Programme. The expenditure incurred on such works during 1958 is Rs. 4,85,696 of which Rs. 48,482 was spent on the works actually completed during the year.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை எந்தெந்த வேலைகளுக்காக என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் 361 வேலைகள் முடிவடைந்து இருக்கின்றன, இதற்கு சுமார் 2 லட்சம் 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேறு 463 வேலைகளுக்கு சுமார் 2 லட்சம் 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know what are the schemes included in the Special Minor Irrigation Programme and when they are likely to be completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have particulars with me, but the Budget Memorandum would have given particulars about Minor Irrigation and Special Minor Irrigation programmes to be carried out this year.

Starting of a Wool-Weaving Industry at Attuvambady

1-30 p. m. * 43 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of SRI S. M. ANNAMALAI) : *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—*

போளூர் தாலூகா, ஆத்துவாம்பாடியில் கம்பளி நெசவுத் தொழில் ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?